216

இளந் தென்றல்

216

14 JUL 1941
MADRAS

1808

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

புதுமைப் பதிப்பக வெளியீடு - 4

இளந்தென்றல்

894.811

[சிறுவர்க்கான பாடல்கள்]

1808

திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை

அவர்களுடைய கவிதைத் தொகுதியிலிருந்து திரட்டியது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 JUL 1941
MADRAS

புதுமைப் பதிப்பகம்
தியாகராயநகர்
சென்னை
1941

முதற் பதிப்பு
விஷு வருஷம்
சித்திரை மாதம்

உரிமை பதிவு
செய்யப்பட்டது

விலை அணா எட்டு

031,1

ப தி ப் பு ரை

திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை யவர்களுடைய கவிதைத் தொகுதியில் சிறுவருக் கேற்றவையாயுள்ள பாடல்களைத் திரட்டி 'இளந் தென்றல்' என்ற பெயருள்ள இந்நூலாக இப்போது வெளியிடுகிறோம். இந்நூலின் தொடக்கத்திலுள்ள சரஸ்வதி படத்தைக் கொடுத்துதவிய மியூஸிக் அகாடமியாருக்கும் 21, 28, 29-ஆவது பாடல்களுக்குரிய படங்களைக் கொடுத்துதவிய 'சக்தி' பத்திராதிபருக்கும் எங்கள் நன்றியைத்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சென்னை,
30-4-1941.

புதுமைப் பதிப்பகத்தார்

பொருளடக்கம்

			பக்கம்
1.	சரஸ்வதி துதி	...	1
2.	இலக்குமி துதி	...	2
3.	நந்தகுமரன்	...	2
4.	சரத்காலம்	...	3
5.	மலர்கள்	...	5
6.	ஔவை	...	6
7.	சந்திரன்	...	7
8.	கிளி	...	9
9.	சூரியகாந்தி	...	13
10.	கடல்	...	15
11.	வெண்ணிலா	...	16
12.	குழந்தை	...	18
13.	கைத்திறன்	...	21
14.	ஆறு	...	23
15.	கிளி	...	25
16.	காக்காய்	...	26
17.	பசு	...	27
18.	காலைப் பாட்டு	...	28
19.	கடிகாரம்	...	30
20.	தாலாட்டு	...	32
21.	பசுவும் கன்றும்	...	36
22.	பொம்மைக் கலியாணம்	...	38
23.	கோழி	...	39
24.	நாய்	...	40
25.	புலிக்கூடு	...	41
26.	ஆகாய விமானம்	...	42

பக்கம்

27. சைக்கிள் ... 44
28. ஊகமுள்ள காகம் ... 45
29. முத்தந் தா ... 47
30. எலிக் கலியாணம் ... 47
31. நெற்பானையும் எலியும் ... 48
32. அப்பம் திருடின எலி ... 49
33. தெய்வக் காட்சி ... 52
34. முதல் துயரம் ... 53
35. ரோஜாவே ஏன் வாடுகிறாய் ... 56
36. குதிரைகள் புலம்பல் ... 57
37. செல்வமும் சிறுமையும் ... 60
38. புல் ... 63
39. மலையும் அணிலும் ... 66
40. குருட்டுப் பையன் ... 68
41. ஒரு பறவையின் சிந்தனை ... 69
42. ஒற்றுமையின் உயிர்நிலை ... 71
43. தீண்டாதார் விண்ணப்பம் ... 72
44. கதர் விற்பனை ... 75
45. தேசக்கொடி ... 78
46. வாழ்த்து ... 80

1. சரஸ்வதி துதி

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
        நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவுஞ்
        செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
        உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலேஉன் பாதம்
        அடைக்கலமே.

2. இலக்குமி துதி

சித்தந் தெளிந்திடும் செய்வினை யாவுந்
திருத்தமுறும்
நித்தம் மறிந்தெழு செல்வமும் தங்கி
நிலைபெறும்நல்
முத்தர்க் குரிய பெரும்பதம் வாய்க்கும்இம்
மூதுலகில்
பத்தர்க் கருளுந் திருமகள் பாதம்
பணிபவர்க்கே.

---

3. நந்தகுமரன்

கார்முகிலின் மேனிபெறும் நந்தகுமரா - என்றன்
கண்களிலே குடியிருப்பாய் நந்தகுமரா
மார்பினிலே வைஜயந்தி மாலையணியும் - உன்றன்
வடிவினிலே மயங்கிநின்றேன் நந்தகுமரா
ஆரமுத மூறுமிதழ் மீதிலமரும் - குழல்
அழகினுக்கோர் அளவுமுண்டோ நந்தகுமரா
சேருமணி யாடரைஞாண் பாதசலங்கை - ஒலி
செய்திடவே வந்தருள்வாய் நந்தகுமரா
பாரும்விண்ணும் பணிந்துதொழும் நந்தகுமரா-என்றும்
பத்தரையாள் ஈசன்நீயே நந்தகுமரா.



1808

4. சரத்காலம்

அற்புதக் காட்சி யீதையா - கண்ணுக்(கு)
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ஐயா.

பொன்னிறம் காணுதே ஐயா - ஒளி
பொங்கி மரகதம் மின்னுதே ஐயா
செந்நெற் கழனியோ ஐயா - இது
செல்வத் திருவாழ் அரங்கமோ ஐயா. 1

மேகம் படருது பாராய் - அதை
வேட்டை யாடிச்சுட ரோட்டுது பாராய்
ஏக மயமாக வேதான் - உல(கு)
எங்கும் பரந்தொளி வீசுது பாராய். 2

செங்கதிர் செய்யும் விழவில் - மலர்த்
தேனையும் உண்ணு தலையுதே வண்டு
தங்கு குளக்கரைத் தாரா - சுற்றித்
தன்னை மறந்து முழங்குதே ஐயா. 3

வேறு

நீலவான் முகட்டை முட்டித்
தாக்கிடு வோமே - இந்த
நீண்டவெளி தன்னைச் சுற்றிக்
கொள்ளை கொள்வோமே
வேலையின்று காலை செய்ய
வேண்டாம் வேண்டாமே - இனி
வீட்டினுக்கும் போக வேண்டாம்
போக வேண்டாமே. 4

பொங்கியெழு வெள்ள மீது
தங்கு நுரைபோல் - எங்கும்
புஞ்சிரிப் பெழுந்து களி
விஞ்சு தே ஐயா
இங்கு நாமும் ஓடிவிளை
யாடிடு வோமே - நல்ல
இன்னிசைகள் பாடிப் பாடி
இன்புறு வோமே. 5



5. மலர்கள்

பூமகளின் புன்னகைபோல்
பூத்திடுவோமே - கம்பன்
பாமணக்குந் தமிழினைப்போல்
பரிமளிப்போமே. 1

வண்ணவண்ணச் சேலைகட்டி
மகிழ்ந்திருப்போமே - இந்த
மண்ணகமும் விண்ணகமாய்
மாறச்செய்வோமே. 2

மங்கையர்க்கும் ஆடவர்க்கும்
மணமுடிப்போமே - மன்னர்
தங்கமுடி மீதும்நாங்கள்
தங்கிவாழ்வோமே. 3

கரும்பினிலும் இனியரசம்
கருதிவைப்போமே - அதை
விரும்பிவரும் நண்பருக்கு
விருந்தளிப்போமே. 4

ஈசனருள் வேண்டிநிதம்
இணையடி போற்றி - நல்ல
வாசமெழு தூபதீபம்
வழங்கி நிற்போமே. 5

---

6. ஔவை

ஔவைக் கிழவி நம்கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி. 1

நெல்லிக் கனியைத் தின்றுலகில்
நீடு வாழும் தமிழ்க்கிழவி
வெல்லற் கரிய மாந்தரெலாம்
வியந்து போற்றும் ஒருகிழவி. 2

கூழுக் காகக் கவிபாடும்
கூனக் கிழவி அவளுரையை
வாழும் வாழ்வில் ஒருநாளும்
மறவோம் மறவோம் மறவோமே. 3



7. சந்திரன்

மீனினம் ஓடிப் பரக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானும் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா. 1

முல்லை மலர்ப்பந்த லிட்டனரோ - தேவர்
முத்து விதானம் அமைத்தனரோ
வெல்லு மதியின் திருமணமோ - அவன்
விண்ணில் விழாவரும் வேளையிதோ. 2

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்ப ருலகின் இயல்பிதம்மா - மதிக்(கு)
இன்னார் இனியாரு முண்டோஅம்மா. 3

மாற்றம் உலகின் இயற்கையென - இங்கு
மாந்தரும் கண்டு தெளிந்திடவோ
போற்று மிறைவன்இம் மாமதியம் - விண்ணில்
பூத்து நிலவ விதித்தனனே. 4

அம்புலிக் கூட்டில் முயல்வருமோ - ஈதோர்
அண்டப் புளுகோ அறியேனம்மா
பம்பி யெழுமலை அங்குளதும் - மேலைப்
பண்டிதர் கண்ட கனவேஅம்மா. 5

கூனக் கிழவி நிலவினிலே - ராட்டில்
கொட்டை நூற்கும்பணி செய்வதைஇம்
மாநிலம் கண்டு மகிழ்ந்திடவே - காந்தி
மாமதி யோங்கி வளருதம்மா. 6

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறுயம்மா. 7

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா - உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா - கண்ணில்
சற்றுந் தெரியாம லாகுதம்மா. 8

பாலாழி மீது படர்ந்தவெண்ணெய் - ஒரு
பந்தா யுருண்டு திரண்டதுவோ
மேலா யுலகில் ஒளிசெயவே - ஈசன்
விண்ணக மிட்ட விளக்கிதுவோ. 9

இரவைப் பகலா யியற்றுதம்மா - வெப்பம்
இல்லா திளைப்பெலாம் ஓட்டுதம்மா
அரவம் விழுங்கினும் அஞ்சாதம்மா - எங்கள்
ஆண்டவன் சூடும் மணியேயம்மா. 10

பொன்மரம் காய்த்த கனியிதுவோ இந்தப்
பூமகள் ஆடும் கழங்கிதுவோ
கன்மன முங்களி கொள்ளக் கவினொளி
காட்டி விளங்கும் மதியிதுவோ. 11

கண்ணுதல் உள்ளக் கருணையதோ - கொற்கைக்
காவலர் கண்ட புகழதுவோ
மண்ணகஞ் செய்திடு புண்ணியமோ - இன்று
வானகம் வந்து நிலவுதம்மா. 12

8. கிளி

தேமலர்ச் சோலையிலே - வாசமெழு
தென்றல் உலாவையிலே
மாமண மங்கையைப்போல் - பெரிது
மகிழ்ந்துநீ தங்கினையோ ? 1

பச்சிலையும் கனியும் - நிறைந்து
படர்ந்து வளர்ஆலின்
உச்சியிற் சென்றிருந்தால் - எப்படியான்
உன்னையும் கண்டிடுவேன் ? 2

நாடுமென் னுள்ளத்திலே - குடிபுகும்
நாயகி கையமர்ந்து
பாடி யமுதளிக்கும் - அழகிய
பைங்கிளி நீயலவோ ? 3

பூனைகள் இங்குவரா - வேடர்தம்
பொறியின் பயமும்இல்லை
யானுனைக் காத்திடுவேன் - இறங்கிநீ
என்கையில் வந்திடாயோ ? 4

வட்டமா யுன்கழுத்தில் - ஒருநாளும்
வாடாத ஆரமதை
இட்டவர் ஆரடியே - எனக்கும்
இயம்புவையோ கிளியே. 5

மாணிக்க மூக்கழகும் - மரகத
வர்ண வடிவழகும்
காணக்கண் ணாயிரந்தான் - இருப்பினும்
கண்டு முடிந்திடுமோ. 6

கத்திரி போலவெட்டிக் - கனியினைக்
கௌவி யெடுத்தோடச்
சித்திர வாயளித்த - கடவுள்
திருவருள் சற்றோஅம்மா. 7

சாய்ந்து தலைவணங்கி - இனிய
தமிழைநீ கற்குமுறை
ஆய்ந்த புலவருமே - எழுதி
அயர்ந்துகை சோர்வரம்மா. 8

பறக்கச் சிறகிருந்தும் - மரக்கிளை
பற்றிநீ ஏறுவதேன்
திறத்தை உலகினுக்கு - மிகவும்
தெரிவிக்கவோ கிளியே. 9

காட்டுத் தினைக்கதிரைப் - பறித்துநீ
கண்டித் தருந்தாமல்
கூட்டுக் கெடுத்தோடும் - குறிப்பெது
கூறுவையோ கிளியே. 10

ஒற்றை யொருகாலில் - நின்றுகனி
உண்ணும் அரியவித்தை
கற்றதும் யாவரிடம் - அவரைநீ
காட்டுவையோ கிளியே. 11

கானத் தினைப்புனத்தில் - குறமகள்
காவலிற் கொள்ளையிடல்
ஈனச் செயலல்லவோ - குலத்துக்(கு)
இழுக்கமும் வந்திடாதோ ? 12

செம்பவழ வாயைத் - திறந்துநீ
செப்பும் மொழிகேட்கில்
உம்பர் அமுதமெல்லாம் - செவியகத்(து)
ஓடி யொழுகுமடி. 13

கொம்பிற் கொலுவிருந்து - களித்துநீ
கூவுங் குரல்வருமேல்
பம்பி யெழுஞ்சோலை - எனக்குப்
பரம பதமடியோ. 14

உண்ணும் கனியிலெழும் - சுவையினை
உள்ளம் களிகொளவே
பண்ணிற் கலந்திடநீ - தெரிந்துசெய்
பக்குவம் ஏதடியோ ? 15

பேசு மரகதமே - உனைத்தினம்
பேணி வளர்த்திடுவேன்
ஆசை யமுதமொழி - அளிக்கநீ
அண்டையில் வந்திடாயோ ? 16

பண்ணுக் கிசைந்ததம்மா - பழத்தொடு
பாலுங் கலந்ததம்மா
மண்ணுக் கமுதமம்மா - உனதுசெவ்
வாய்மொழி தத்தையம்மா. 17

மாணிக்கச் செப்பினிலே - அமுதை
வடித்துச் சுவைபெருக்கி
பேணி யுனக்களித்த - பிரமன்
பெரியன் பெரியனம்மா. 18

சின்னஞ் சிறுபள்ளியில் - உனக்கொரு
சிங்காரப் பெஞ்சுமிட்டுத்
தின்னக் கனியளித்துப் - பாலபாடம்
செப்புவன் வாகிளியே. 19

கண்ணுக் கினிமையாகி - எனதிரு
காதும் குளிரச்செய்யும்
வண்ணப் பசுங்கிளியே - குயிலுமுன்
மாதவஞ் செய்ததுண்டோ? 20

பாலுக்குச் சீனியைப்போல் - பசுந்தமிழ்ப்
பாடலுக் கின்னிசைபோல்
சோலைக்குப் பைங்கிளியே - உனது
துணையும் பெரிதேயம்மா. 21

உள்ளக் களிப்பெழுந்து - வெளியில்வந்(து)
உன்னுருக் கொண்டதுவோ
மெள்ளப் பிடித்துநெஞ்சில் - அணைத்திட
வேட்கை மிகுதேயம்மா. 22

9. சூரியகாந்தி

ஆகாய வீதி
யுலாவி வருமிந்த
ஆதித்த னேஉன
தன்பனடி
வேகாமல் வெந்து
வெயிலில் உலர்ந்துநீ
விண்ணிலே கண்ணாக
நிற்பதேனோ ? 1

. பொன்னிற முண்டு
பொலிவுண்டு கண்டுனைப்
போற்ற இனிய
வடிவுமுண்டு
என்ன அரிய வரம்பெற
இன்னும்நீ
இத்தவம் செய்வது
பூமகளே. 2

காயும் கதிரவன் மேனியை நோக்கஉன்
கண்களும் கூசிக் கலங்காவோ
நேயம் மிகுந்தவர் காய வருத்தம்
நினைப்பதும் இல்லையோ சொல்லடியே. 3

காலையி லேகதிர் வீசிவர - நிதம்
கண்டு களித்து மகிழ்ந்திடும்நீ
மாலையி லேமுகம் வாடித் தளர்ந்திட
வந்த வருத்தமும் ஏதடியே? 4

செங்கதிர் செல்லும் திசையது நோக்கிஉன்
செல்வ முகமும் திரும்புவதேன்
மங்கையே உன்மண வாளனுகில் - அவன்
வார்த்தை யொன்றுசொல்லிப் போகானோ? 5

ஆசை நிறைந்தஉன் அண்ணலை நோக்கிட
ஆயிரங் கண்களும் வேண்டுமோடி
பேசவும் நாவெழ வில்லையோடி - கொஞ்சம்
பித்தற் பெருமையும் வந்ததோடி? 6

மஞ்சள் குளித்து முகமினுக்கி - இந்த
மாயப் பொடிவீசி நிற்கும்நிலை
கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ
கண்ணீர் உகுக்குமோ யாரறிவார்? 7

உன்பெயர் சூரிய காந்தியென்றார் - அதன்
உண்மையும் இன்றே அறிந்துகொண்டேன்
இன்ப மளித்திடும் பூவுல கத்துனக்(கு)
யாரும் இணையில்லை இல்லையம்மா. 8

---

10. கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே - நீதான்
இரவும் உறங்காயோ கடலே
அல்லும் பகலும் அலைகடலே - உனக்(கு)
அலுப்பும் இலையோ கருங்கடலே! 1

உருண்டு திரண்டு வருங்கடலே - உடைந்(து)
ஓடிப் போவதேன் கடலே
வெருண்டு மதிகெட் டாய்கடலே - பாறை
விலகிப் போகுமோ கடலே! 2

பொங்கு திரைகளோ கடலே - அவை
புரவி நிரைதாமோ கடலே
எங்கும் உனதொலியோ கடலே - அன்றி
இடியின் முழக்கமோ கடலே! 3

ஓடம் எடுத்தெறியும் கடலே - தயை
உனக்குச் சற்றிலையோ கடலே
ஆடல் வீடிதனைக் கடலே - நீயும்
அழிப்ப தழகாமோ கடலே! 4

மலையை வயிற்றடக்கும் கடலே - எண்ணில்
மகர மீனுலவும் கடலே
விலைகொள் முத்தளிக்கும் கடலே - சிப்பி
விளையா டற்குதவும் கடலே! 5

மழைக்கு மூலமும் நீ கடலே - அதை
வாங்கி வைப்பதும் நீ கடலே
வழுத்து மகிமையெலாம் கடலே - எவர்
மதித்து முடிக்கவலார் கடலே! 6

---

11. வெண்ணிலா

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே - ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே. 1

பானுவெங் கதிர்குளிக்கும் வெண்ணிலாவே - நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே. 2

ஆம்பல்களி கூரவரும் வெண்ணிலாவே - உனக்(கு)
அம்புயம்செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே. 3

இரவையும்நண் பகலாக்கும் வெண்ணிலாவே - உன்னை
இராகுவும் விழுங்கிடுமோ வெண்ணிலாவே. 4

வளர்ந்து வளர்ந்துவந்த வெண்ணிலாவே - மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ வெண்ணிலாவே. 5

கூகைஆந்தை போலநீயும் வெண்ணிலாவே - பகல்
கூட்டினில் உறங்குவாயோ வெண்ணிலாவே. 6

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே - நீயும்
பாரில்வர அஞ்சினையோ வெண்ணிலாவே. 7

பளிங்குபோலு முன்னுருவில் வெண்ணிலாவே - கறை
பற்றியே இருப்பதேனோ வெண்ணிலாவே. 8

பூமியின் உருநிழலோ வெண்ணிலாவே - அது
போகாக் குறுமுயலோ வெண்ணிலாவே. 9

குன்றும் குகைகளுமோ வெண்ணிலாவே - அன்றிக்
கூனக் கிழவிதானோ வெண்ணிலாவே. 10

ஆழியும்நீ வரக்கண்டு வெண்ணிலாவே - குதித்(து)
ஆடுவதெக் காரணமோ வெண்ணிலாவே. 11

ஆதாரம் ஒன்றில்லாமல் வெண்ணிலாவே - நீயும்
அந்தரத்தில் நிற்பதேனே வெண்ணிலாவே. 12

சுற்றித் திரிவதுமேன் வெண்ணிலாவே - உனக்குச்
சொந்தஇடம் ஒன்றிலையோ வெண்ணிலாவே. 13

அண்டிவாராய்நீயெனினும் வெண்ணிலாவே - இன்னும்
அகன்றெங்கும் போய்விடாதே வெண்ணிலாவே. 14

பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே - உன்றன்
பக்கம்வந்து சேருவேனே வெண்ணிலாவே. 15

பால்போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே - என்றன்
பாங்கில்விளை யாடவாராய் வெண்ணிலாவே. 16

பாங்கில்விளை யாடவந்தால் வெண்ணிலாவே - நல்ல
பால்தருவேன் பழந்தருவேன் வெண்ணிலாவே. 17

துன்பமிகத் தாமடைந்தும் வெண்ணிலாவே - பிறர்க்குச்
சுகமளிப்பார் உன்போலுண்டோ வெண்ணிலாவே. 18

இருளதனை விழுங்கவல்ல வெண்ணிலாவே - உன்னை
இருள்விழுங்கும் சூழ்ச்சியெதோ வெண்ணிலாவே. 19

12. குழந்தை

எங்கே யிருந்துவந்தாய்
குழந்தாய் - அதை
யானும் அறிந்திடச்சொல்
குழந்தாய்

எங்கும் நிறைவெளியில்
இருந்தேன் - சற்றே
இங்கும் இருக்கவந்தேன்
அம்மா. 1

நீல மலர்போலும்
விழிகள் - எங்கு
நீதேடிப் பெற்ருயென்
குழந்தாய்

ஞாலம் இதற்குவரும்
வழியில் - வானம்
நன்கொடை தந்ததிவை
அம்மா. 2

கண்ணில் ஒளிவிளங்கக்
கண்டேன் - அந்தக்
காட்சியின் காரணமென்
குழந்தாய்

விண்மீன் ஒளிசிறிது
தங்கி - அங்கு
மின்னி விளங்குகின்ற
தம்மா. 3

நெஞ்சம் களிக்கவரும்
குழந்தாய் - கண்ணில்
நீர்த்துளி நின்றகதை
எதுவோ

வஞ்சப் புவியில்எனைத்
தேடி - அது
வழியெதிர் வந்துநின்ற
தம்மா. 4

ஒளிரும்உன் நெற்றியிலே இந்த - மென்மை
உண்டான தெப்படிஎன் குழந்தாய்
தளிருந் தழையச்செய்யுங் கரமொன்(று) - அதைத்
தடவி அளித்ததுண்டென் அம்மா. 5

பூவின் அழகுனது
முகத்தில் - என்றும்
பொலிந்திடும் காரணமென்
குழந்தாய்

தேவரும் கண்டறியாக்
காட்சி - யானும்
தெளிவுறக் கண்டபலன்
அம்மா. 6

புன்னகை பூத்திடும் வேளை - ஒரு
புதுமையும் காண்பதேனோ குழந்தாய்
முன்னம் அரம்பையர்கள் மூவர் - ஒன்றுய்
முத்தம் அளித்தகுறி அம்மா. 7

ஆசைக் குழந்தாய்இச் செவிகள் - உன்னை
அடைந்த வரலாறே துரையாய்
ஈசனும் பேசிடவாய் திறந்தான் - கேட்க
இவையும் எழுந்தனஎன் அம்மா. 8

இன்பச் சிறுகரங்கள்
இவைதாம் - உனக்(கு)
எவ்வா றமைந்தனஎன்
குழந்தாய்

அன்பு வளர்ந்திவ்வுரு
வாகி - என்னை
அண்டி அணைந்திருக்கு
தம்மா. 9

ஆவி குளிரவருங் குழந்தாய் - இந்த
அழகிய கால்கள்எங்கே கொண்டாய்
தேவப் பிறவிகளின் சிறகோ(டு) - ஒரு
சிங்காரப் பெட்டியிலே கண்டேன். 10

இந்தக் கருவியெல்லாஞ் சேர - நீதான்
எவ்வா றமைந்தனைஎன் குழந்தாய்
எந்தை இறைவனுளங் கொண்டான் - உடன்
யானும் எழுந்துநின்றேன் அம்மா. 11

மனமிக மகிழ்ந்திடக்
குழந்தாய் - நீயென்
மடியினில் வந்தவகை
எதுவோ

தினமும்நீ செய்தபெருந்
தவத்தால் - அந்தத்
திருவருள் கூட்டிவைத்த
தம்மா. 12

13. கைத்திறன்

வெயில்வரினும் மழைவரினும் விரிகுடையாம் கையே
வெயர்வைவரின் ஆற்றுசிறு விசிறியதாம் கையே
துயிலவொரு மகவைத்தொட்டில் இட்டசைக்கும்கையே
துரிதமுடன் எழுதவொரு தூவிகொளும் கையே. 1

இனியசெந்நெற் புலம்உழுதற் கேர்பிடிக்கும் கையே
இன்னிசைகள் எழுப்பவீணை ஏந்துமெழிற் கையே
கனியுதிர்ப்பக் கல்லெறியும் கவண்பிடிக்கும் கையே
கண்களிப்பப் படமெழுதிக் காட்டும்என்றன் கையே. 2

தானதர்மம் செய்யவெதும் தளர்விலதாம் கையே
தளர்பவரைக் கண்டுதலை தாங்கஎழும் கையே
பானம்செய்தற் கேற்றவொரு பாத்திரமாம் கையே
பையரவைப் போலவந்து பயமுறுத்தும் கையே. 3

மலரெடுத்து நல்லசெண்டு மாலைகட்டும் கையே
வாய்க்கினிய பண்டமெலாம் வைத்துதவும் கையே
சலமதனில் ஓடம்விடச் சலிப்பிலதாம் கையே
தரையில்மோட்டார்ரயில் நடத்தச்சமர்த்துளதாம்கையே.

கோபுரம்சேர் கோயிலொடு குடிசைகட்டும் கையே
குளங்கிணறு குட்டையெலாம் குழித்துதவும் கையே
ஆபரணம் பணிமணிகள் ஆய்ந்துசெய்யும் கையே
ஆடைகள்பா வாடைகளும் ஆக்குமெழிற் கையே. 5

மல்லயுத்தம் செய்வதற்கு வந்துநிற்கும் கையே
வாள்பிடித்து வகைவகையாய் மரமறுக்கும் கையே
நெல்லைக்குத்தும் அரிசிதீட்டும் நொய்கொழிக்கும் கையே
நேயரொடு பாண்டியாடி நிதம்ஜெயிக்கும் கையே. 6

நாடியசீர் நாடடைய ராட்டுருட்டும் கையே
நல்லகதர் நெய்யமிகு வல்லமைகொள் கையே
பாடியவாய் தேனூறும் பாரதியார் பாடல்
பண்ணமையப் பாடுதற்குப் பாணிகொட்டுங் கையே. 7

அழைப்பதற்கும் அகற்றுதற்கும் அபிநயிக்கும் கையே
ஆக்குதற்கும் அழிப்பதற்கும் ஆற்றல்பெறும் கையே
உழைப்பதற்கும் ஊட்டுதற்கும் ஊக்கமுறும் கையே
உதவுதற்கும் ஏற்பதற்கும் உரிமைகொளும் கையே. 8

மக்களைத்தம் ஒக்கல்வைத்து வளர்த்திடுமென் கையே
வண்ணமலர் தலைக்கணிந்து வாசமூட்டுங் கையே
தக்கபெரி யோர்க்குமிகத் தான்வணங்கும் கையே
தரணியிலுன் திறமையெலாம் சாற்றல்எளி தலவே. 9

---

14. ஆறு

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன் - அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன் - மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் - அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் - அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன். 3

ஏருத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந்தேன் - நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 5

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன் - சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற் - குழாய்
நீராக வும்சென்று பாய்ந்துவந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன் - நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன் - மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்துவந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா. 8





15. கிளி

பச்சைக்கிளியே வாவா
பாலுஞ்சோறும் உண்ணவா
கொச்சிமஞ்சள் பூசவா
கொஞ்சிவிளை யாடவா. 1

கவலையெல்லாம் நீங்கவே
களிப்பெழுந்து பொங்கவே
பவழவாய் திறந்துநீ
பாடுவாயோ தத்தம்மா. 2

வட்டமாயுன் கழுத்திலே
வானவில்லை ஆரமாய்
இட்டமன்னர் யாரம்மா
யானறியக் கூறம்மா. 3

பையப்பையப் பறந்துவா
பாடிப்பாடிக் களித்துவா
கையில்வந் திருக்கவா
கனியருந்த ஓடிவா. 4

பவழக்காரத் தெருவிலே
பவழங்காண வில்லையாம்
எவரெடுத்துச் சென்றனர்
எனக்கறிந்து சொல்வையோ. 5

பங்கஜாட்சி கையிலே
பவழங்காண வில்லையாம்
எங்குமுன்னைத் தேடினார்
எடுத்ததுண்டோ தத்தம்மா. 6

அரசர்மார்பில் ஆரத்தை
ஆரோகொண்டு போனாராம்
திருடிச்சென்றார் எவரம்மா
தெரியுமானாற் சொல்லம்மா. 7

---

16. காக்காய்

காக்காய் காக்காய் பறந்து வா
கண்ணுக்கு மை கொண்டு வா. 1

கோழீ கோழீ கூவி வா
குழந்தைக்குப் பூ கொண்டு வா. 2

வெள்ளைப் பசுவே விரைந்து வா
பிள்ளைக்குப் பால் கொண்டு வா. 3



17. பசு

பச்சைப்புல்லைத் தின்றுவெள்ளைப்
பால்தரநீ என்ன
பக்குவஞ் செய்வாய் அதனைப்
பகருவையோ பசுவே
உச்சியுடல் நக்கி ஈன்ற
உடனுனது கன்றை
உயிரெழுப்பும் மாயமெதோ
உரைத்திடுவாய் பசுவே ! 1

வாய்க்கினிய பால்தருவாய்
வயற்குரமும் தருவாய்
வண்டிகட்டக் காளையும்நீ
வளர்த்தளிப்பாய் பசுவே
தாயில்லாப் பிள்ளைகட்குத்
தாயாவாய் நோயால்
தளர்பவர்க்கு மருத்துவச்சி
தானாவாய் பசுவே ! 2



18. காலைப்

அருண னுதித்தனன்
அளிகளும் மொய்த்தன
அம்மா நீ எழுந்தோடி

பசிய புல் நுனியில்
பனித்துளி தானே நீ
பைங்கிளி எழுந்தோடி

பொழுது விடிந்தது
பூஞ்செடி பொலிவதைப்
பொன்னேநீ எழுந்தோடி

காகம் கரைந்தது
கனியுதிர் காவினைப்
கண்ணே நீ எழுந்தோடி

பாட்டு

அம்புஜம் விண்டது
பாராய்
வாராய். 1

பதித்தவெண் முத்தமோ
பாராய்
வாராய். 2

பொற்கோழி கூவிற்று
பாராய்
வாராய். 3

காலையும் ஆயிற்று
பாராய்
வாராய். 4



19. கடிகாரம்

[கடிகாரம் வாங்கித் தரும்படி கேட்டுக்கொண்ட தன் மகளிடம், ஏழையான ஒரு தாய், "மகளே, நேரத்தை அறிவதற்கு இயற்கையிலேயே அநேக லக்ஷியங்களிருக்க நமக்கு வேறு கடிகாரமும் வேண்டுமா?" எனக் கூறுகின்ருள்.]

சேவற் கோழியுண்டு காகமுண்டு - வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவு பொன்னே! அதி காலை தெரிந்திட
வேறும் கடிகாரம் வேண்டுமோடி? 1

செங்கதிர் பொங்கி வருவதுண்டு - நல்ல
செந்தா மரைகள் மலர்வதுண்டு
மங்கையே! காலைப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி? 2

தன்னிழல் தன்னடி யாவதுண்டு - சுடர்
தானுந் தலைநேர் எழுவதுண்டு
இன்னமு தே! பகல் உச்சியி தென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி? 3

விண்மணி ஆழியில் வீழ்வதுண்டு - வாசம்
வீசு மந்தாரை மலர்வதுண்டு
கண்மணியே! மாலைக் காலம் குறித்திடக்
கையில் கடிகாரம் வேண்டுமோடி? 4

முல்லை யரும்பு விரிவதுண்(டு) - ஆம்பலின்
மொட்டுகள் மெள்ள அவிழ்வதுண்டு
மெல்லியலே! மாலை வேளை யறிந்திட
வெள்ளிக் கடிகாரம் வேண்டுமோடி? 5

அம்புலி நட்சத் திரங்களுண்டு - கணக்(கு)
ஆக்கி யறிய வழிகளுண்டு
இன்பமே! நேரம் இரவில் அறிந்திட
இன்னும் கடிகாரம் வேண்டுமோடி? 6

கம்மென வாசம் கமழ்பாரி சாதம்இக்
காவில் மலர்ந்து சொரிவதுண்டு
அம்மையே! நள்ளிர வீதென்று சொல்லிட
ஆர்க்கும் கடிகாரம் வேண்டுமோடி? 7

காலை மாலைஎந்த வேளையும் - சூரிய
காந்தி மலர்தானே காட்டிடாதோ
வேலை யெழுந்த திருவே! உனக்கினி
மேலும் கடிகாரம் வேண்டுமோடி? 8

சுற்றுப் பொருளெல்லாம் உற்று நோக்கி - அவை
சுட்டும் மணிநேரம் கண்டறிவாய்
பெற்ற முத்தே! இந்த உண்மை அறிவோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி? 9

20. தாலாட்டு

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ.

மாமணியோ முத்தோ
மரகதமோ மன்னவர்தம்
தாம முடிமீது
தயங்கும் வயிரமதோ. 1

முல்லை நறுமலரோ
முருகவிழ்க்குந் தாமரையோ
மல்லிகைப் பூவோ
மருக்கொழுந்தோ சண்பகமோ.

தெள்ளமுத முண்டு
தெவிட்டாக் கனியுண்டெம்
உள்ளங் குளிர
உரையாடும் பைங்கிளியோ. 3

கற்கண்டு சீனி
கனியுங் கனிந்தொழுகு
சொற்கொண் டெமக்குச்
சுகமளிக்கும் பூங்குயிலோ. 4



நெஞ்சிற் கவலையெலாம்
நீங்கத் திருமுகத்தில்
புஞ்சிரிப்பைக் காட்டிஎம்மைப்
போற்றும் இளமதியோ. 5

பல்லக்கில் அம்மான்
பவனி வரும்பொழுது
மெல்ல மடியிருந்து
விளையாடும் பைங்கிளியோ. 6

பூமாலை வாடும்மணம்
பொன்மாலைக் கில்லையென்று
பாமாலை வைத்தீசன்
பாதம் பணிபவனே. 7

பாலமுதம் உண்டுதமிழ்ப்
பாமாலை பாடியிந்தத்
தாலம் புகழவரும்
சம்பந்தன் நீதானே. 8

கொன்றையணிந் தம்பலத்தில்
கூத்தாடும் ஐயனுக்கு
வன்றொண்ட னாக
வளர்ந்தவனும் நீதானே. 9

கல்லைப் பிசைந்து
கனியாக்குஞ் செந்தமிழின்
சொல்லை மணியாகத்
தொடுத்தவனும் நீதானே. 10

பூவில் அயனும்இந்தப்
பூமீது வள்ளுவர்தம்
பாவின் நயமுணரப்
பாலகனாய் வந்தானே. 11

கம்பன் கவியின்
களியமுதம் உண்டிடமால்
அம்புவியில் வந்திங்(கு)
அவதாரம் செய்தானே. 12

தேவாரப் பாகும்
திருவா சகத்தேனும்
நாவார உண்ணஎம்மான்
நன்மகவாய் வந்தானே. 13

ஆக்கம் பெருக
அறம்வளர நாட்டையெலாம்
காக்கும் பெருமான்
கருணைத் திருவுருவோ. 14

புள்ளி மயிலோடு
புனங்காத்து நிற்குமந்த
வள்ளி மணவாளன்
மதலையாய் வந்தானே. 15

ஆயர் பதியில்
அற்புதங்கள் செய்துநின்ற
மாயவனே இங்கெமக்கு
மகவாகி வந்தானே. 16

நாலா யிரக்கவியின்
நல்லமுதம் உண்டிடமால்
பாலாழி நீங்கியொரு
பாலகனுய் வந்தானே. 17

பெண்கள் சிறுவீட்டைப்
பேணு தழித்தவர்தம்
கண்கள் சிவக்கவைக்கும்
கண்ணபிரான் நீதானே. 18

ஆரடித்தார் நீயழுதாய்
அடித்தாரைச் சொல்லியழு
சீரெடுத்த செல்வச்
சீமான் திருக்குமரா. 19

பாலை விரும்பினையோ
பணிகாரம் வேண்டினையோ
சோலைப் பசுங்கிளியே
சுந்தரமே சொல்லியழு. 20

சப்பாணி கொட்டித்
தளர்ந்தனையோ அல்லதுன்றன்
கைப்பாவைக்|காகக்
கலங்கி அழுதனையோ. 21

தித்திக்கும் தேனும்
தினமாவும் கொண்டுன்றன்
அத்தை வருவாள்
அழவேண்டாம் கண்மணியே. 22

மாங்கனியும் நல்ல
வருக்கைப் பலாக்கனியும்
வாங்கியுன் அம்மான்
வருவார் அழவேண்டாம். 23

கண்ணுறங்கு கண்ணுறங்கு
கண்மணியே கண்ணுறங்கு
ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ. 24

---

21. பசுவும் கன்றும்



தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி. 1



அம்மா வென்குது
வெள்ளைப் பசு - உடன்
அண்டையில் ஓடுது
கன்றுக் குட்டி. 2



நாவால் நக்குது
வெள்ளைப் பசு - பாலை
நன்ருய்க் குடிக்குது
கன்றுக் குட்டி. 3

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு - மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி. 4

22. பொம்மைக் கலியாணம்

பொம்மைக்கும் பொம்மைக்கும் கலியாணம்
பூலோக மெல்லாம் கொண்டாட்டம்
பாவைக்கும் பாவைக்கும் கலியாணம்
பகலும் இரவும் வேலையாம்.
கொட்டகை போடுது சிலந்தி
குறடு கட்டுது கறையான்.
கோலம் போடுது நண்டு.
கண்ணுக்குமை காக்கை கூட்டுது
கழுத்துக்காரம் தத்தை கட்டுது
கொண்டைக்குப்பூ கோழி வளர்க்குது.
குயில்கள் இனிய குரலிற்பாடும்
மயில்கள் நல்ல நடனமாடும்.
வண்டினம் எல்லாம் வந்துகூடி
வாய்க்கினிய அமுதம் வைக்கும்.
ஊராரே நீர் வாரீரோ
வந்து மணமும் காணீரோ
கண்டு வாழ்த்திப் போகீரோ.



23. கோழி

சேவற் கோழி

கோழீ கோழீ வாவா
கொக்கோ கோ என்றுவா
கோழீ ஓடி வாவா
கொண்டைப் பூவைக் காட்டுவா. 1

குத்திச் சண்டை செய்யவோ
குப்பை கிண்டி மேய்வோ
கத்திபோலுன் கால்விரல்
கடவுள் தந்து விட்டனர்? 2

காலை கூவி எங்களைக்
கட்டில் விட் டெழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்
வெற்றி கொண்ட கோழியே. 3

பெட்டைக் கோழி

கோழீ கோழீ வாவா
கூரை விட் டிறங்கிவா
கோழீ முட்டை இடவா
கூட்டில் அடை காக்கவா. 4

பெட்டைக் கோழீ வாவா
பிள்ளை களைக் கூட்டிவா
குட்டை நெல்லைக் கொட்டினேன்
கொத்திக் கொத்தித் தின்னவா. 5

வஞ்ச மாய்ப் பருந்ததோ
வானில் வட்டம் போடுது
குஞ்ச ணைத்துக் காப்பாயோ
கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ. 6

---

24. நாய்

வீட்டுவாசல் காப்பவன்
வேட்டையாட வல்லவன்
ஆட்டுக்கிடைப் பாண்டியன்
அன்புமிக்க தோழன். 1

உண்டசோற்றை எண்ணி
உயிரும்விடத் துணிபவன்
மண்டலத்தில் நாய்போல்
வாய்த்ததுணை உண்டோ. 2



25. புலிக்கூடு

பந்தம் எரியுதோடி - கண்களைப்
பார்க்க நடுங்குதடி
குந்தம்வாள் ஈட்டியெல்லாம் - கூடவே
கொண்டு திரியுதடி. 1

வாயைப் பிளக்குதடி - கையுறை
வாளும் உருவுதடி
பேயைப் படைத்தபின்னே - இதனையும்
பிரமன் படைத்தானடி. 2

வாலை முறுக்குதுபார் - வால்நுனி
வட்டஞ் சுழலுதுபார்
சாலப் பதுங்குதுபார் - நம்மீது
சாடவும் நோக்குதுபார். 3

இடித்து முழங்குதடி - தொண்டையும்
இரும்பாலே செய்ததோடி
அடுத்து நெருங்காதேடி - அதுமிக
ஆங்காரம் கொள்ளுதடி. 4

கூட்டில் அடைத்திடினும் - இரையினைக்
கொண்டு கொடுத்திடினும்
காட்டில் வளர்ந்தகுணம் - புலிகளும்
காட்டா திருக்குமோடி. 5

மானைப் படைத்ததெய்வம் - புலியையும்
வளர்த்து விடலாமோடி
தேனைப் பழித்தசொல்லாய் - எனக்குநீ
தெரிந்துரை செய்வாயோடி. 6

26. ஆகாயவிமானம்

கப்பல் என்றுமே - மெல்லக்
கடலில் நீந்துவதாம்
தப்பித் தப்பியே - ரயிலும்
தரையில் ஊருவதாம். 1

வானமீ தெழுவேன் - அங்கே
வட்டம் சுற்றிடுவேன்
கானம் மலையெல்லாம் - யானோர்
கணத்தில் தாண்டிடுவேன். 2

இடைவி டாதுதபால் - உலகில்
எங்கும் கொண்டுசெல்வேன்
சடைவி லாமலே - பலரைத்
தாங்கியும் போவேன். 3

நன்மை செய்யவந்தேன் - அதை
நன்குண ராமல்
வன்மைப் போரில்எனை - இழுத்து
மாட்டி விட்டாரையோ. 4

தீவினை செய்ய - என்னைத்
தினமும் ஏவுகிறார்
பூவுலக மெல்லாம் - சுட்டுப்
பொசுக்கச் சொல்லுகிறார். 5

அன்பைக் கொன்றுவிட்டார் - மனிதர்
அரக்கராகி விட்டார்
துன்பம் செய்திடவே - இன்று
துணிந்திறங்கி விட்டார். 6

ஆசைப் பேயெங்கும் - தலைவிரித்(து)
ஆடு கின்றதையோ
நாச காலமையோ - புவியும்
நரக மாகுதையோ. 7

காட்டில் ஓநாயும் - நரியும்
கடுவாயும் புலியும்
நாட்டு நாகரிகம் - கண்டு
நகைக்க லாச்சுதையோ. 8

சாந்த மூர்த்தியின் - அகிம்சா
தருமம் மேற்கொண்டு
மாந்தர் இவ்வுலகில் - நன்றாய்
வாழ்வ தெந்நாளோ ? 9



27. ஸைக்கிள்

தங்கையேபார் தங்கையேபார்
ஸைக்கிள்வண்டி இதுவேபார். 1

சிங்கார மானவண்டி
சீமையிலே செய்தவண்டி. 2

இரும்பாலே செய்தவண்டி
எங்கெங்கும் ஓடும்வண்டி. 3

மாடில்லை குதிரையில்லை
மாயமதாய்ப் பறந்திடும்பார். 4

தீயில்லை புகையுமில்லை
தீவிரமாய்ச் சென்றிடும்பார். 5

காலாலே மிதிப்பதனால்
கடும்விசையில் போயிடும்பார். 6

ஒன்றன்பின் ஒன்றாக
உருளும்பை தாக்களைப்பார். 7

அக்காளும் தங்கையும்போல்
அவைபோகும் அழகைப்பார். 8

28. ஊகமுள்ள காகம்

தண்ணீர் கிடையாமல் - காகமொன்று
தவித்த லேகையிலே
மண்ணுற் செய்தஒரு - சாடியினை
வழியிற் கண்டதம்மா. 1

சாடியின் மீதிருந்து - தலையைச்
சரித்து நோக்கிடவே
சாடியிலே தூரில் - சற்றே
தண்ணீர் தெரிந்ததம்மா. 2

காகம் உடன்எழுந்து-
சிறுசிறு
கற்கள்
பொறுக்கிவந்து
ஊகமாய்ச் சாடியினுள்-
அவற்றை
ஒவ்வொன்ருய்
இட்டதம்மா. 3

இட்டிடவே நீரும் -
மேலே
எழுந்து வந்ததம்மா
சட்டமாகக் குடித்
காகம் [துக் -
தளர்ச்சி
தீர்ந்ததம்மா. 4

ஊக்க முடையவர்க்குத் - துன்பம்
உலகில் இல்லையம்மா
ஆக்கம் பெருகுமம்மா - இதைநீ
அறிய வேண்டுமம்மா. 5



29. முத்தந்தா

கண்ணே மணியே முத்தந்தா
கட்டிக் கரும்பே முத்தந்தா
வண்ணக் கிளியே முத்தந்தா
வாசக் கொழுந்தே முத்தந்தா. 1

தேனே பாலே முத்தந்தா
தெவிட்டாக் கனியே முத்தந்தா
மானே மயிலே முத்தந்தா
மடியில் வந்து முத்தந்தா. 2

---

30. எலிக் கலியாணம்

எலிக்கும் எலிக்கும் கலியாணம்.
இரவிலே சுப முகூர்த்தமாம்.
வீட்டெலி வந்தது, காட்டெலி வந்தது,
வெள்ளெலி வந்தது, முள்ளெலி வந்தது,
குண்டெலி வந்தது, சுண்டெலி வந்தது.
எங்கெங்கு முள்ள எல்லா எலிகளும்
கூட்டமாய்க் கூடிக் குதிலுள் நுழைந்தபின்
நல்ல விருந்தேழு நாளாய் நடந்தது.
மங்கல மாக மணமும் நடந்தது.
வாழ்க வாழ்கவே மணமக்கள்
வாழ்க வாழ்கவே.

---

31. நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப்
பழம்பானை - அந்தப்
பானை ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு
சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்துநெல் தின்றதடா.

உள்ளே புகுந்துநெல்
தின்றுதின்று - வயி(று)
ஊதிப் புடைத்துப்
பருத்ததடா
மெள்ள வெளியில்
வருவதற்கும் - ஓட்டை
மெத்தச் சிறிதாகிப்
போச்சுதடா. 2





பானையைக் காலை
திறந்தவுடன் - அந்தப்
பாட்டியின் பக்கமாய்
வந்தவொரு
பூனை எலியினைக்
கண்டதடா - ஓடிப்
போய்அதைக் கௌவியே
சென்றதடா. 3

கள்ள வழியினிற் செல்பவரை - எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ள படியே நடப்பவர்க்குத் - தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா. 4

32. அப்பம் திருடின எலி

செட்டியார் வீட்டில் அடுக்களையில் - சென்ற
தீபா வளியன் றிரவுதனில்
வட்டியில் அப்பம் இருந்ததம்மா - அதை
வாசத்தி னுல்அறிந் தோரெலிதான் : 1

‘ நெய்யினில் சுட்ட பணிகாரம் - இது
நேர்த்தியாய்ச் சுட்ட பணிகாரம்
பையப் பையக்கடித் துண்பதற்கும் - வெகு
பக்குவ மான பணிகாரம். 2

யார்க்கும் கிடையாப் பெருநிதியாம் - இதை
யான்இன்று பெற்றதென் பாக்கியமே
பார்க்கும் பொழுதேநீர் வாயினிலே - ஊறிப்
பாய்கின்றதே பசி யாகின்றதே.’ 3

[அப்போது வேறு சில எலிகள் சத்தமிடக் கேட்டு :]

‘ என்ன சத்தம் ஓஹோ தம்பிமார்கள் - கூடி
இங்கு விளையாட வந்தனரோ
அன்னவர் ஓடி வருமுன்னமே - யானும்
அப்பத்தைக் கொண்டு மறைந்திடுவேன். 4

ஏதும் ஒருபொடி யாகிலும் - யானவர்க்(கு)
ஈந்திடேன் முற்றுமே தின்றிடுவேன்
ஓதிய தானம் தனக்குப்போக - மீதி
உள்ளவர் அல்லவோ செய்திடுவார் ?’ 5



என்று சொல்லிஅந்த அப்பத்தினை - வாயில்
ஏந்திக் கடித்திழுத் தோடிடவே
கன்றப் பசித்த இளைஞரெல்லாம் - வந்து
காலகடுக்கத் தேடிப் போயினரே. 6

ஆரும் அறியாத மூலையிலே - அந்த
அப்பத்தை அவ்வெலி கொண்டுவைத்துக்
கூரிய பல்லால் கறம்பி ஒருபொடி
கூடச் சிதருமல் தின்றதம்மா. 7

மட்டுக்கு மிஞ்சிப் புசித்ததனுல் - மூச்சு
வாங்க வருந்தி வயிறூதி
கட்டப் படுவதைச் சுற்றத்தார் எல்லோரும்
கண்டொரு பண்டிதர்க் காளும்விட்டார். 8

பண்டிதர் வந்துகை பார்த்தனர் அவ்வெலி
பண்டம் முழுதையும் உண்டகதை
விண்டதும் கேட்டுக் குறிகளும் நோக்கி
விதிப்படி ஆய்ந்து விளம்பினரே. 9

'அப்பம் முழுதும்நீ தின்றனையே - அதை
அன்பிற் குரியஉன் தம்பியர்க்கும்
ஒப்பவே பங்கிட் டளித்திருந்தால் - துன்பம்
ஒன்றும்வந் துன்னை அணுகாதே. 10

அன்றியும் உன்தம்பி மாருங் கடும்பசி
ஆறிக் களித்திருப் பார்களன்றோ
இன்றினிச் செய்வதென் இவ்வுலகம் - விட்டு
யாத்திரை போவது திண்ணம்' என்றார். 11

ஆனதனாலே கிடைத்த பொருளை - நாம்
ஆகும் மட்டும்பகுத் துண்ணவேண்டும்
ஈனமாந் தன்னயத் தால்வருந் துன்பமே
இன்ப மளிக்கும் பொதுநயமே. 12

அளவு கடந்திடில் ஆரமுதும் - விஷம்
ஆகும் என்றுநம தான்றோர்கள்
உளபடியே சொன்ன வாக்கியத் துண்மையை
உள்ளத்திற் கொள்ளுங்கள் தோழர்களே. 13

33. தெய்வக் காட்சி

வான வெளிதனிலே - கவிந்தெழு
மாலைப் பொழுதினிலே
கூனப் பிறைவரவே - சிவன்திருக்
கோலம் தெளிவேனடி. 1

முற்றிய ஆழியிலே - அலைவந்து
மோதி எறிகையிலே
கற்றைக் கதிரெழவே - உமைதிருக்
காட்சி வியப்பேனடி. 2

தாமரைப் பொய்கையிலே - கதிரொளி
தட்டுமவ் வேளையிலே
பூமலர்ந் தோங்கிடவே - ஹரியென்று
போதம் நயப்பேனடி. 3

மாமலைச் சாரலிலே - மதமிகு
வாரணக் கூட்டத்திலே
காமலர் சிந்திடவே - கணேசரென்
கண்முனே நிற்பாரடி. 4

மேட்டு நிலங்களிலே - தினைக்கதிர்
விம்மி விளைகையிலே
காட்டு மயில்வரவே - குகனுமென்
காதல் விளைப்பாரடி. 5



34. முதல் துயரம்

பிள்ளை

முல்லை பூத்ததம்மா - இருவாட்சி
மொட் டவிழ்ந்ததம்மா
மல்லிகைப் பூவும் - மலர்ந்துநல்
வாசம் வீசுதம்மா ! 1

தும்பி பாடுதம்மா - கிளிபயில்
சோலை தேடுதம்மா
தம்பி எங்கேஅம்மா - விளையாடத்
தனியே நின்றேனம்மா ! 2

படரும் முந்திரியில் - கனிமிகப்
பழுத் துதிருதம்மா
தொடரும் வேனிலும் - நமக்கிங்கே
தொடங்கி விட்டதம்மா ! 3

சின்னஞ் சிறுபிஞ்சு - வெள்ளரியில்
செழித் திருக்குதம்மா
கன்னிக் காய்பறிக்கத் - தம்பியையும்
காணே மேயம்மா ! 4

அம்பொன் மாலைகள் - செடிபல
அணிந்து நின்றஅம்மா
தம்பி இல்லாமல் - அழகவை
தருவ தில்லையம்மா ! 5

புனைந்த
சித்திரம்போல் -
வண்ணத்திப்
பூச்சி சுற்றுதம்மா

துணைவன்
இல்லாமல் -
யானும்அதைத்
தொடர்ந்து
செல்லேனம்மா! 6

வளர்த்த ரோஜாவும் - புதுமண
மகிழ்ச்சி காட்டுதம்மா
அழைத்து வாராயம்மா - தம்பியும்
அறிந்தி டானேஅம்மா ? 7

தாய்

யாரழைத்தாலும்-அவன்செவிக்(கு)
எட்ட மாட்டாதே
பாரில் நம்மைஅவன் - இனிவந்து
பார்க்க மாட்டானே. 8

வாச மலரைப்போல் - வளர்ந்தவன்
வாடி விட்டானே
ஈசன் சந்நிதியில் - விளையாடி
இருக்கின் றானப்பா ! 9

பிள்ளை

குயிலைத் தேடானே - கிளியொடு
கொஞ்ச வாரானே
மயிலை நோக்கானே - நம்மையெலாம்
மறந்தும் போனானே ? 10

வேனிற் காலமெலாம் - நம்மையிங்கு
விட் டிருப்பானே
யானும் என்னசெய்வேன் - தனித்தினி
இருப்ப தெப்படியோ ? 11

காலை மாலைதனில் - சிற்றோடைக்
கரையில் சோலைதனில்
சீலச் செல்வனொடு - சுற்றிநிதம்
திரிதல் போச்சுதையோ ! 12

இனிய கதையெலாம் - அவனைப்போல்
யாவர் சொல்வாரம்மா
கனியைச் செந்தேனை - இனிஎந்தக்
காலம் காண்பேனையோ ! 13

---

35. ரோஜாவே ஏன் வாடுகிருய் ?

கள்ளன் வந்தான்
கள்ளன் வந்தான்
கதவை யுடைத்தான் -
வீட்டுக்
கதவை யுடைத்தான்.

கொள்ளை யிட்டென்
பொருளை யெல்லாம்
கொண்டு போய்விட்டான்
ஐயோ
கொண்டுபோய்விட்டான். 1

கத்திகட்டித் காத்துநின்ற
காவ லாளரைப் - பல
காவ லாளரை
எத்திவிட்டுப் பறந்துசென்ருன்
என்ன மாயமோ - ஐயோ
என்ன மாயமோ. 2

காலைஎழும் கதிரவனும்
கண்ட தில்லையோ - இதைக்
கண்ட தில்லையோ
ஓலமிட்டும் கேட்கவில்லை
ஓடுகின்ருனே - ஐயோ
ஓடுகின்ருனே. 3

பூவுலகில் வாழ்ந்ததினிப்
போதும் போதுமே - எனக்குப்
போதும் போதுமே
தேவர்திரு வடிபணியச்
செல்லுகின்றேனே - இதோ
செல்லுகின்றேனே. 4



36. குதிரைகள் புலம்பல்

கற்றுத் தெளிந்தநல் மானிடரே - எம்மைக்
காக்கப் பிறந்த பெரியோரே
சற்றும் அறிவிலா எம்மொழிக்குச் - செவி
சாய்க்கத் திருவுளம் கொள்வீரே. 1

வளர்ந்து வரும்வாலே வெட்டிவெட்டித் - தேய்ந்த
மாறுபோ லாக்கிக் குறைத்திடும்நீர்
தளர்ந்த பொழுதெங்கள் ஈப்பகை ஓட்டிடத்
தக்க உதவிகள் செய்வதுண்டோ? 2

இரும்புக் கடிவாளம் மாட்டுவதேன் - வாயை
ஈசன் படைத்த திதற்காமோ
பெரும்புவி மீதினில் உங்களுக்கும் - இந்தப்
பேதைகள் செய்த பிழைகளுண்டோ? 3

வம்புகள் பேசிடும் வாயையன்றே - பூட்டி
வைப்பது நீதி முறையாகும்
நம்பி யிருப்போர்க்குத் துன்பம் இழைப்பது
நல்லோர் பெரியோர் செயலாமோ? 4

வெள்ளிப்பூண் கட்டிய சேணமிட்டால் - நெஞ்சு
வேதனை யில்லா திருந்திடுமோ
அள்ளி யிடும்பிடிப் புல்லுக்காக - எங்கள்
ஆவியைக் கொள்வ தழகாமோ? 5

பக்கம் திரும்பியே பார்த்திடாமல் - எங்கள்
பார்வையைக் கட்டி மறைப்பதுமேன்
திக்கெலாம் தந்த பிரமனிலும் - நீவிர்
தீவிர புத்தி உடையவரோ? 6

திண்ணிய லாடமும் கட்டுவதேன் - அதில்
தீயெழ எம்மையும் ஓட்டுவதேன்
புண்ணியம் நீர்செய்ய வேண்டாமையா - எம்மைப்
போக்கிலே விட்டிடில் போதுமையா. 7

எண்ணிக்கை அற்றதோல் பட்டைகளைக் - கட்டி
எம்மீ திறுக்கி முறுக்கிவைப்பீர்
கண்ணுக் கழகவை ஆயிடினும் - எங்கள்
கண்டம் நெரிவ தறியீரோ? 8

பற்றி முதுகினில் ஏறிக்கொள்வீர் - எம்மைப்
பட்சிகள் போலப் பறக்கச்செய்வீர்
சற்றும் இரக்கம் இலாதவரோ - நீங்கள்
சாத்திரம் கற்ற பயன் இதுவோ? 9

ஈசன் அளித்தகால் இரண்டிருக்க - நீரும்
எங்கள் குறுக்கை முறிப்பதேனோ
தாசரைப் போல்வேலை செய்திடினும் - தயை
சற்றும் உமக்கு வருவதுண்டோ ? 10

கையில் சவுக்கொன்று போதாதென்றோ - இரு
காலிலும் முட்களைக் கட்டிக்கொண்டீர்
ஐயையோ ஏழையெம் ஆவி பறித்திட
ஆயிரம் கூற்றுவர் வேண்டுமேயோ ? 11

வண்டியில் கொண்டெமை மாட்டுகின்றீர் - காலை
மாலையெலாம் தட்டி ஓட்டுகின்றீர்
நொண்டினாலும்விட்டுப் போகமாட்டீர் - உடல்
நோவ அடித்து வெருட்டுகின்றீர். 12

மோட்டார் வண்டிவந்தும் மோட்சமில்லை - நாங்கள்
முன்செய்த தீவினைக் கென்செய்குவோம்
ஏட்டா லெழுத அடங்கிடுமோ - கஷ்டம்
யாரிடம் சொல்லி அழுதிடுவோம் ? 13

கோடிகோடி ஸைக்கில் வந்திடினும் - எங்கள்
கூட்டத்துக் கேதுமோர் நன்மையுண்டோ
ஓடிஓடி உயிர் ஓய்ந்திடவோ - எம்மை
உண்டாக்கி விட்டான் உடையவனே ? 14

மேடு பள்ளங்களில் ஓடவேண்டும் - வெய்ய
வேனில் மழையிலும் ஓடவேண்டும்
காடு செடிகளில் ஓடவேண்டும் - இந்தக்
கஷ்டங்கள் யாரிடம் சொல்வோமையா ? 15

கொட்டகைக் கூடாரம் போட்டுக்கொள்வீர் - அதில்
கூத்தாடிக் கூத்தாடி ஓடச்சொல்வீர்
பட்டினி யாக இறந்திடினும் - இந்தப்
பாடெவர் பட்டுப் பிழைப்பரையோ ? 16

காலிளேப் பாறியே நிற்கவொட்டீர் - வாயிற்
கௌவிய புல்லேயும் தின்னவொட்டீர்
மூலே முடுக்கென்றும் எண்ணமாட்டீர் - எம்மை
மூச்சு விடாமல் துரத்துவீரே. 17

ஆழக்குக் காணம் அளித்திடுவீர் - அதற்(கு)
ஆயிரம் வேலேயும் இட்டிடுவீர்
ஏழைக் கிரங்கெனும் நீதிமொழி - நீங்கள்
ஏட்டில் படித்ததை ஏன்மறந்தீர் ? 18

சித்தம் இரங்கிட வேண்டுகின்ருேம் - எம்மை
க்ஷேமமாய்க் காத்திடக் கெஞ்சுகின்ருேம்
புத்த முனியருள் போதனேயை - என்றும்
போற்றுதல் உங்கள் கடனுமே. 19

---

37. செல்வமும் சிறுமையும்

க. செல்வச் சிறுமியர் களிப்பு

பாகமாகச் செய்த பண்டமுண்போம் - நன்ருய்ப்
பக்குவம் வந்த பழங்களுண்போம்
தாகமா னல்பல பானகமும் - தாயார்
தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம். 1

காலத்துக் கேற்ற உடையணிவோம் - வாசம்
கட்டிய சந்தனம் பூசிடுவோம்
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து - மலர்
கூந்தலிற் சூட்டி அழகுசெய்வோம். 2

பந்துகள் ஆடிப் பழகிடுவோம் - கழல்
பாங்கியர் தம்மொடும் ஆடிடுவோம்
சந்தமெழக் கும்மி பாடிடுவோம் - சுற்றிச்
சப்பாணி கொட்டிச் சிரித்திடுவோம். 3

ஓடி ஒளித்துக் களித்திடுவோம் - நாங்கள்
ஒற்றை இரட்டையும் வைத்திடுவோம்
நாடியே வட்டுகள் ஆடிடுவோம் - தோழி
நாணக்கண் பொத்தி நகைத்திடுவோம். 4

உன்னி யெழும்ஊஞ்சல் ஆடிடுவோம் - கேட்போர்
உள்ளம் குளிரவே பாடிடுவோம்
சின்னஞ் சிறுவீடு கட்டிடுவோம் - அதில்
சித்திர வேலைகள் செய்திடுவோம். 5

பத்துப் பசுக்களெம் வீட்டிலுண்டு - நல்ல
பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை
நித்தம் சுகமாக வாழ்ந்திடுவோம் - இந்த
நீணிலத் தெம்மையொப் பாருமுண்டோ. 6

உ. ஏழைச் சிறுமியர் மனப்புழுக்கம்

நல்லபண் டங்களைக் கண்டறியோம் - ஒரு
நாளும் வயிரார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம் - பசி
ஆற வழியின்றி வாடிடுவோம். 7

அன்னப்பால் காணுத ஏழைகட்கு - நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்குமம்மா
என்னப்பா யாம்படும் பாட்டையெல்லாம் - சென்று
யாரிடம் சொல்லி அழுவோமம்மா. 8

இட்டெலி ஐந்தாறு தின்றேமென்பீர் - நீங்கள்
ஏதும் கருணை யிலீரோஅம்மா
பட்டினி யாக இறந்திடினும் - நாங்கள்
பாவம் பழிசெய்ய மாட்டோமம்மா. 9

தேயிலே தேயிலே என்பீரம்மா - இது
தேக்கிலே தானே தெரியாதம்மா
வாயும் வயிறும் நிறைந்திடுமோ - இதில்
வைத்த அமுதும் திகைந்திடுமோ. 10

காப்பி காப்பியென்று கத்துவீரே - அதைக்
கண்ணுலே கண்டது மில்லையம்மா
சாப்பிடற் கேற்ற உணவிதுவோ - அன்றிச்
சட்டையோ தொப்பியோ கூறுமம்மா. 11

ஆனைக் கொம்பன்சாதம் உண்டோமென்பீர் - இதை
ஆரே உலகினில் நம்பிடுவார்
தேனைப் பழித்த மொழியுடையீர் - எம்மைத்
தேராத பித்தரென் றெண்ணினீரோ. 12

சோப்புச் சோப்பென்று புகழ்ந்திடுவீர் - அது
சுட்டுக் கடிக்குங் கிழங்கதுவோ
காப்புக் கைவீசி நடப்பவரே - அதன்
காரியம் சற்றே உரைப்பீரே. 13

ஆனி ஆடிமாதக் கொந்தலிலே - மந்தை
ஆடுகள் போலக் கொடுகிநிற்போம்
வேனிலில் வெந்துடல் வேர்த்திடவே - வெயில்
வேளை அலைந்து திரிந்திடுவோம். 14

சுற்றிய கந்தை ஒருமுழமாம் - அதில்
தோன்றிய பீறலும் ஆயிரமாம்
பற்றும் அழுக்கினைப் போக்கவென்றால் - உடை
பஞ்சு பஞ்சாகப் பறக்குமம்மா. 15

ஈரோடு பேனுக் கிடமாச்சு - கூந்தல்
ஈந்தஞ் செடியது போலாச்சு
வாரி முடிப்பது மில்லையம்மா - எண்ணெய்
மாத மூன்றாக அறியாதம்மா. 16

புண்ணும் சிரங்கும் நிறைந்ததம்மா - அதில்
போட மருந்தும் கிடையாதம்மா
கண்ணில் உறக்கமும் இல்லையம்மா - எங்கள்
கஷ்டம் அறிபவர் உண்டோஅம்மா. 17

38. புல்

பசும்புல் என்பெயர். பட்ட பாடெல்லாம்
ஒருபெருங் கதையாம். உரைப்பதும் எளிதோ ?
விரிவிடம் படுமொரு வீட்டின் முன்றிலில்
வளர்ந்தேன். அங்குள மனிதரோ கொடியர்.
தத்தம் மக்களும் தாமுமே என்றும்
பெற்றுப் பெருகிப் பெருங்குடி யாகி
வாழக் கருதுவர். வகுத்திட லென் ? அவர்
வாயிற் படியில் வாடி வணங்கி

வயிற்றிற் கின்றிநா வறண்டு 'தண்ணீர்
தண்ணீர்' என்று தவித்துத் தவித்து
வாணு ளெல்லாம் வருந்தி நொந்தேன்.
குடிக்க நீரும் கொடுத்திலர் பாவிகள்.
விண்ணி லிருப்பினும் மண்ணில் யான்படும்
வருத்தமும் வாட்டமும் கண்டவ் வானம்
அளித்த தமுதம்; ஆர வுண்டனன்.
விசும்பில் துளிகள் வீழி னல்லால்
பசும்புல் தலையிப் பாரிற் காணுமோ?
மனிதரும் போற்றி வாழ்வமோ யாமும்?
கேளீர் கதையினும்: கிடைத்த நீரை
அருந்திப் பலநாள் அயர்வும் நீங்கித்
தெளிந்து நிமிர்ந்தேன். சிறிதென் உடலில்
பச்சையும் பிடித்தது. பார்த்தனர் பாவிகள்.
தரிக்கிலர் உள்ளம். தழைக்கும் தலையைக்
காலால் மிதித்தனர் கழுத்தையும் அறுத்தனர்.
ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்.
படர்ந்த இடமெலாம் பாழே யாக்கினர்.
இருந்த இடமும் இல்லா தியற்றினர்.
உயிரும் உடலும் குறுகி ஒருசிறு
வேராய்த் தரையுள் வெகுநா ளாக
ஒளித்திருந் தேன். அவ் வுறைவிடந் தேடி
வான்மழைத் தோழன் வந்தெனைக் கண்டு
'மனிதன் செயலால் வலியிழந் தனையோ?
என்துணை யிருக்க இடருனக் குண்டோ?
அறிவிலி போலும்நீ! அஞ்சேல் அஞ்சேல்.
யாவையும் காப்பவன் ஈசன்' என்றெலாம்

தேற்றிய மொழியெனக் கூற்றமும் உறுதியும்
பெரிதும் அளித்தது. பெயர்த்தும் மெலமெலத்
தலையெடுத் தேன். அதைத் தறுகணர் கண்டு
பிடித்தனர் வெட்டினர் பிடுங்கி எறிந்தனர்
சாணியைக் கரைத்துத் தலையில் கொட்டினர்
துடைப்பங் கொண்டு துரத்தி யடித்தனர்.
யாவும் சகித்தங் கிருந்தனன். என்செய்வேன்?
தளர்ச்சி யுற்றிலேன். தகும்நற் காலம்
வருமெனச் சற்று மறைந்து தங்கினேன்.
ஐவரை விடயான் அதிபல சாலியோ?
மறைந்து சின்னாள் வாழுங் காலை,
ஒருதினம் வீட்டில் உள்ளார் அனைவரும்
உறவினர் இருக்கும் ஓரூர் சென்றனர்.
வெகுநா ளாகியும் மீண்டிலர். யானும்,
இதுவே தருணம் என்று நினைத்து,
விரைவின் வளர்ந்து, விரும்பிய படியெலாம்
தழைத்துச் செழித்துச் சார்விட மெங்கும்
படர்ந்து பற்றிப் பல்கிளை யாகி,
வாய்த்தஇவ் வித்தாம் மக்களைப் பெற்று
வாழ்ந்திருக் கின்றேன். மற்றவர் வாழும்
வீட்டையும் இடித்து விடும்வலி இந்நாள்
எனக்குண் டாயினும், இழிவென விடுத்தேன்.
இணங்கி யிருப்பவர் பிணங்கிப் பிரியவும்
பிணங்கிப் பிரிந்தவர் இணங்கிக் கூடவும்
செய்வினை என்போல் செய்ய வல்ல
மந்திர வாதியிவ் வையகத் துண்டோ?
செய்பிழை யாவும் தெரிந்து பொறுத்தேன்.

பொறுத்தவர் என்றும் பூமி யாள்வார்.
எனக்குச் சொந்த மில்லா இடமெதாம்?
புல்லே யாயினும் புல்லிய குணமிலே.
அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்.
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்.
முயற்சி கைவிடேன். முயற்சி கைவிடாத்
திறமுடை யோரைத் திருமகள்
பெரிதும் உவந்து பேணமுன் நிற்குமே.

---

39. மலையும் அணிலும்

'அற்பத் திருடா' என்றெனை யழைத்த
வெற்பே! யானும் விளம்பக் கேளாய்.
அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரு வண்மையும் உனக்கென்(று)
உரைமொழி முற்றும் உண்மையே. ஆயின்,
ஒருவகைப் பொருளின் ஓருல காமோ
ஒருவெயில் மழையின் ஓராண்டு தேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்றுய்க் கூடினே உலகாம், ஆண்டாம்.
ஆதலின், யானிவ் வகிலமீ துதித்தே
இருப்பதை இழுக்கா எண்ணவும் மாட்டேன்.
என்தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்?
உன்பெரும் உருவெனக் கில்லை. உனக்கும்,
என்சிறு வடிவிலே. மேலும், என்றன்
உள்ளக் களிப்பில் உற்று நோக்கில்
எள்ளளத் தனையும் உனக்கிலை யிலையே.

அணிற்பிள்ளை சாடி ஓடி அலைந்து
விளையா டற்கு விரிவிடம் பெறுவாய்.
ஐய மிதற்கிலை. அடலும் ஆற்றலும்
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு விதமாம்
அறத்தொடும் முறையொடும் ஆழ்ந்த அறிவொடும்
அனைத்துமிவ் வுலகில் அமைக்க லாயின.
வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லைநீ யாயின், மற்றிங் கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னா லாகுமோ ?
யாவரே பெரியர் யாவரே சிறியர் ?
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம்.
ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம்.
ஆதலின், அற்பர் ஆகா தவரென
ஓதுதல் மடமையின் சாதனை யாமே.

40. குருட்டுப் பையன்

இப்பிறப்பில் ஒருபொழுதும் எனக்கறிய முடியா
திருக்குமொளி என்பதென்னை இருவிழியி னடையும்
ஒப்பரிய நன்மைகள்இக் கண்கெட்ட சிறியேன்
உணரும் வண்ணம் உரைத்திடுவீர் உற்றஉற வினரே.

அனுதினமும் கண்காட்சி அற்புதங்கள் பேசி
அகங்களிப்பீர் ஆதித்தன் சோதிமயம் என்பீர்
எனதளவில் வெம்மையெனத் தோற்றுமிவன் செயலால்
இரவுபகல் மாறிவரல் எங்ஙன்அறி யேனே. 2

பாடிவிளை யாடுபொழு துறங்குபொழு தல்லால்
பகற்பொழு திராப்பொழுதிப் பகுப்பெனக்கு முண்டோ
நாடியுணர்ந் திருக்கநிதம் கூடுமெனில் எனக்கிந்
நானிலத்தில் ஓயாத பகலாகு மன்றே? 3

மைபடியும் வானமென்றும் வில்லென்றும் வர்ண
வகையென்றும் மனமகிழ்ந்து வனப்புரைகள் தருவீர்
ஐவகையிப் பொறியிருக்க வேறுபொறி யுறுமேல்
அறியுலக மாட்சியெலாம் அளவிடவும் எளிதோ? 4

உலகிலெனக் குற்றபெருங் குறைநோக்கி நீவிர்
உளம்வருந்தல் பன்முறைநெட் டுயிர்ப்பொடுகேட்டறிவேன்
அலகிறந்த பொறுமையக மிருக்கஒரு நாளும்
அறியமுடி யாதகுறை அனுபவிப்ப தரிதோ? 5

ஒருகாலும் நீக்கமுடி யாதகுறை வந்தென்
உளத்திலெழும் பெருங்களிப்பை அழித்திடலா காதே
வருபாடல் இதுவழுத்து பொழுதேழைக் குருட்டு
வாலிபனு யிருப்பினுமோர் மகராசன் யானே. 6

41. ஒரு பறவையின் சிந்தனை

முட்டைக் கரு



முற்றுங் கருவாகி
- ஒருசிறு
முட்டையில்
வாழ்கையிலே
சுற்று முலகெனக்கும்
- உருண்டவெண்
தோடா
யிருந்ததம்மா. 1

கூட்டில் குஞ்சு

குஞ்சுப்பருவத்திலே
- பிறிதொரு
கூட்டில்
இருக்கையிலே
விஞ்சு முலகினையான்
- உலர்ந்தபுல்
வீடாகக்
கண்டேனம்மா.

இறகு முளைக்கும் சிறு பறவை



இறகு முளைக்கையிலே - பறந்திட - யானும் பழகையிலே
நிறையு முலகெனக்குத்-தழைகொடி-நேரிடமானதம்மா.

பறக்கும் பெரும் பறவை



நீண்ட வெளிவரவே - உயர்ந்தவிண் - நீலந் தெரிந்ததம்மா
ஆண்டவ னன்றிளவர் - உலகை - அறிந்திட வல்லாரம்மா !

42. ஒற்றுமையின் உயிர்நிலை

ஒற்றுமை யாக உழைத்திடுவோம் - நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரியவேண்டாம் - இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டாம். 1

கூடி விருந்துண்ண வேண்டவில்லை - பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை
நாடி எவரொடும் நட்பினராய்த் - தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டமுண்டோ. 2

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு - சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத் தாய்பெற்ற மக்களென்று - நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ. 3

சாதி இரண்டலால் வேறுளதோ - ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ
ஆதி இறைவன் வகுத்ததுவோ - மக்கள்
ஆக்கிய கற்பனை தானிதுவோ. 4

மானமே வாழ்வின் உயிர்நிலையாம் - அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்
ஈன சாதியெனும் பேச்சினைப்போல் - நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ. 5

மன்னுயிர்க் காக முயல்பவரே - இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே - என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா. 6

43. தீண்டாதார் விண்ணப்பம்

'ஆண்டிப் பண்டாரம்' மெட்டு

விண்ணப்பஞ் செய்தோம் - விடையை
வேண்டிக் கொள்கின் றோம்.

கண்ணப்பன் பூசைகொளும்
கடவுள் திருக்கோவிலிலே
நண்ணக்கூடாதோ நாங்கள்
நடையில்வர லாகாதோ ? 1

சிலந்திக்கும் வரமளித்த
சிவபெருமான் திருவடியை
நலம்பெறவே கண்டுநாங்கள்
நமஸ்கரித்தல் ஆகாதோ ? 2

பெற்றானெனும் சாம்பானுக்குப்
பேறளித்த பெருமானை
வற்றாத அன்பொடுயாம்
வணங்குதலும் வழுவாமோ ? 3

நந்தனுக்குப் பதமளித்த
நடராசன் கோவிலிலே
வந்தனைகள் செய்துநாங்கள்
வழிபடுதல் முறையலவோ ? 4

பண்ணமையப் பாடிவந்த
பறைச்சிக்கும் பரிசளித்த
கண்ணபிரான் திருவடியாம்
கண்டுதொழ லாகாதோ ? 5

பார்ப்பார்கள் தோள்சுமந்து
பாணரைமுன் திருக்கோயில்
சேர்த்தார்கள் என்றகதை
தெரியாதார் உண்டோஐயா ? 6

பூவாரம் அணிந்தபிரான்
பொன்னடிக்கீழ் நின்றெளியேம்
தேவாரம் பாடில்அவர்
செவிக்கின்பம் ஆகாதோ ? 7

காணுதற்குக் கண்ணளித்த
கடவுளடி கண்டுதொழ
வேணுமென்று மனிதருக்கும்
விருப்பமெழல் அதிசயமோ ? 8

குற்றமிலா எமைக்கண்டு
கோவிலையும் அடைக்கலாமோ
பெற்றவரைக் காணவரும்
பிள்ளைகளைத் தடுப்பாருண்டோ ? 9

ஆலயத்திற் சென்றுதொழ
ஆணையிடும் ஔவைமொழி
ஞாலமிசை எங்களுக்கும்
நன்மைதராப் புன்மொழியோ ? 10

ஆவுரித்துத் தின்பரேனும்
அரனடிக்கீழ் அன்பரெனில்
தேவரவர் என்றுரைக்கும்
திருமொழியும் வெறுமொழியோ ? 11

சாதியினால் குறைவில்லை
தாழ்ந்தவரும் பத்தியினால்
வேதியரிற் பெரியரென
விளம்புமொழி வீண்மொழியோ ? 12

சண்டாளர் ஆனாலும்
சக்கரத்தான் அடியவரேல்
கொண்டாடத் தக்கோரெனக்
கூறுவதும் பொய்மொழியோ ? 13

சாவியிட்டுப் பூட்டுமிட்டுச்
சந்நிதியில் காவலிட்டுத்
தேவிருக்கும் கோவிலைநீர்
சிறைச்சாலை ஆக்கலாமோ ? 14

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் களிப்பினைநீர்
பொல்லாதார் பொருளெனவே
பூட்டிவைப்ப தழகாமோ ? 15

நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நலமளிக்கும் நலத்தினைநீர்
கல்லாலே கோட்டைகட்டிக்
கடுங்காவல் செய்யலாமோ ? 16

காணார்க்கும் கண்டவர்க்கும்
கண்ணளிக்கும் கண்ணுதலை
வீணாக மூடிவைத்து
விளங்காமற் செய்யலாமோ ? 17

எல்லார்க்கும் வரமளிக்கும்
எம்பெருமான் ஆலயங்கள்
வல்லார்க்குச் சொந்தமென
வழக்காடல் முறையோஐயா? 18

பதவியில்லை பணமில்லை
படிப்பேதும் இல்லைஎமக்(கு)
உதவிசெய்ய உங்களுக்கும்
உள்ளமிரங் காதோஐயா. 19

வையகத்தில் ஏழைகளும்
மானிடராய்ப் பிறந்துவிட்டோம்
உய்யவழி தேடுகின்றோம்
உதவிசெய்ய வேண்டுமையா. 20

---

44. கதர் விற்பனை

பாவியென் கதையினைக் கேளுமையா - அந்தப்
பாஞ்சாலி கதையும்ஈ தொக்குமோஐயா
ஆவியைப் பிடித்துநான் அலைவதெல்லாம் - என்றன்
அருமைக் குழந்தைகளுக் காகவேஐயா. 1

கூடப் பிறந்தவரும் மாண்டுபோனர் - என்னைக்
கொண்ட கணவரும்போய்க் காடுமறைந்தார்
தேடி அவரளித்த பொருளுமில்லை - ஒரு
செம்பா லடித்தகாசென் கையிலுமில்லை. 2

வாடி முகம்சடைத்த
மக்களு முண்டு - தீரா
வயிற்றுப் பசியுமுண்டு
நானு முண்டு
வீடுங் குடியிருக்க
இல்லை ஐயா - என்றன்
விதியின் கொடுமைகளும்
கொஞ்சமோ ஐயா. 3

பருத்தி விளைக்குச்சென்று
பஞ்சுவாங்கினேன் - அந்தப்
பஞ்சை அரைத்துநல்ல
நூலும் நூற்றேன்
ஒருத்தி துணையுமின்றி
ஆடையும்நெய்தேன் - அதை
ஊரூராய்க் கொண்டுகொண்டு
விற்கவும் வந்தேன். 4

நல்ல சரக்குசீமைச் சரக்கென்றுநீர் - இந்த
நாட்டுச் சரக்கைப் பழிக்கலாமோ
மெல்லிய பூவாடை நெய்துதருவோம் - உங்கள்
மேலான ஆதரவே வேண்டுமையா. 5

எங்களையோர் மில்லெனவே எண்ணலாமோ- அந்த
இரும்புக் கசதியுண்டோ களைப்புமுண்டோ
பொங்கு மனக்கவலை ஏதுமுண்டோ - வீட்டுப்
பொறுப்புகள் சற்றுமுண்டோ கூறுமையா. 6

நெல்லையள்ளிக் குத்துவேனே நெய்திடுவேனே - நான்
நெருப்பினை மூட்டுவேனே கொட்டை நூற்பேனே
மில்லினுக்கு வாயுமுண்டோ வயிறுமுண்டோ - அதை
விட்டுவில காதமக்கள் கூடவேயுண்டோ. 7

பஞ்சினையான் பன்னுவேனே பணிசெய்வேனே-இந்தப்
பசலை அழாதபடி பால்கொடுப்பேனே
நெஞ்சிரக்கமுள்ளவரே கொஞ்சம்பொறுத்தால் - இன்னும்
நேரியநல் லாடைநெய்து கொண்டுவாரோமோ. 8

அஞ்சு வயதுமகள் கோலமிட்டால் - அதை
அழகில்லை என்றழிக்கும் தாயருமுண்டோ
பஞ்சு படுவதிலும் பெரும்பாடு - நாங்கள்
படுவதும் நீங்களறி யாததோஐயா. 9

காசுமியர் சால்வைநெய்த கையுமில்லையோ - உயர்
காசியிலே நெய்தபட்டின் காலமும் போச்சோ
மாசிலாத டாக்காவின் மஸ்லினுடை - இன்னும்
வாவென்றால் வாராதோ வளர்ந்திடாதோ. 10

அன்னிய நாடுகளுக் காடையனுப்பி - மானம்
அழியாமல் காத்ததுங்கள் முன்னோரல்லவோ
இந்நிலை மறந்துநீங்கள் இந்தநாளில் - உங்கள்
இடுப்புத் துணிக்கலைவ திழிவல்லவோ. 11

சாயமிட்ட சேலைகளை நெய்துதாரோமோ - நல்ல
சரிகையில் வேலைசெய்து கொண்டுவாரோமோ
நேயமெழ ஆதரித்தால் போதுமையா - இந்த
நீணிலத்தில் வெற்றியொடு நிற்போமையா. 12

கைகால் களைக்கநெய்த கதராடை - இரு
கண்கள் சடையநெய்த கதராடை
ஐயாநீர் வாங்கியிதை அணிவீரோ - எங்கள்
அரும்பசிக் கன்னமெதும் அளிப்பீரோ. 13

குறுக்கு முறியநெய்த கதராடை - கும்பிக்
கொதிப்பை அடக்கிநெய்த கதராடை
மறுத்துநீர் தள்ளாமல் கொள்ளுவீரோ - எங்கள்
வயிற்றில் எரிதணியச் செய்குவீரோ. 14

தேசமெல்லாம் புகழ்ந்திடும் ஆடைஐயா - மேலைச்
சீமையையும் நடுக்கிடும் ஆடைஐயா
காசுபணம் இல்லாத ஏழைகளுக்காய் - அந்தக்
காந்திமகான் போற்றுங்காம தேனுஐயா. 15

வேறுவேறுபுண்ணியங்கள் செய்யவேண்டுமோ - கதர்
வேட்டிவாங்கி யணிவது போதாதோஐயா
நூறுபேருக் கன்னம்நிதம் அளித்தபலன் - இந்த
நூலாடை கட்டுபவர்க் குண்டேஐயா. 16

---

45. தேசக் கொடி

பாரில் உயர்ந்தமலை இமயமலை - அன்னை
பாரத தேவி பாராட்டுமலை
சீரில் உயர்ந்திடுநம் தேசக்கொடி - அதன்
சிகரம் அணிந்தின்று பறக்குதுபார். 1

வீரர் துணிந்தேறி நட்டகொடி - இது
வெற்றி விருதா யெடுத்தகொடி
யாரும் இறைஞ்சி வணங்குங்கொடி - நமக்(கு)
என்றும் சுதந்திரம் ஈட்டுங்கொடி. 2

கங்கையினும் புனித மானகொடி - கோடிக்
கதரின் இனியமணம் கமழுங்கொடி
மங்கையர் நோன்பிருந்து நெய்தகொடி - அவர்
வாழ்வு தழையவந்த மங்கலக்கொடி. 3

சத்தியம் தவறாது காக்குங்கொடி - சாதிச்
சமயச் சழக்குகளைப் போக்குங்கொடி
உத்தம வீரர்களும் பத்தினிகளும் - தத்தம்
உயிருக் குயிராகப் போற்றுங்கொடி. 4

காணுப் புதுமைகளைக் காட்டுங்கொடி - தொண்டர்
கனவையும் நனவாக மாற்றுங்கொடி [டின்
வாணுளின் இன்பமெலாம் வழங்குங்கொடி - நாட்
வளத்தை வளர்க்கவந்த மந்திரக்கொடி. 5

ஏழை அழுதகண்ணீர் துடைக்குங்கொடி - அவன்
இதயம் குளிர இன்பம் பொழியுங்கொடி
ஊழையும் உப்பக்கம் காணுங்கொடி - நித்தம்
உழைத்துமுன் னேறநம்மை ஊக்குங்கொடி.

ராட்டின மல்லாது வேறுபடை - இந்த
நாட்டினுக் கில்லையென்று நாட்டுங்கொடி
ஈட்டிவாள் குந்தங்கள் பீரங்கிகள் - இருந்
திருந்து துருவேறச் செய்யுங்கொடி. 7

மானம் உருவாக வந்தகொடி - இதை
மாசுறச் செய்வது பாவம்பாவம்
ஊனில் உயிருள்ள காலமெல்லாம் - மிக
ஊக்கமாய் நின்றுநாம் காத்திடுவோம். 8

---

46. வாழ்த்து

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின்மேல் வெற்றிஎமக் கெய்த வேண்டும். 1

கஞ்சாவை நஞ்சாகக் கருத வேண்டும்
கள்ளொழுகுங் கடைவாயை மூட வேண்டும்
அஞ்சாத வீரரெங்கும் தோன்ற வேண்டும்
அகிம்சா தர்மமவர் பேண வேண்டும்
என்சாதி உயர்சாதி இழிந்த சாதி
என்றுசொல நாவுமெழா திருக்க வேண்டும்
நெஞ்சாரும் நினைப்பெல்லாம் நிகழ்த்தி நின்றேன்
நின்மலனே இரங்கிநீ அருள்செய் வாயே. 2

பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்
பயிர்களெலாம் செழித்தோங்கி வளர வேண்டும்
தருமநெறி தவறாது தழைக்க வேண்டும்
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்
திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்
தேசாபி மானமெங்கும் திகழ வேண்டும்
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும்
காந்திமதி நின்னடிகள் வாழ்த்தி னேனே. 3

கிடைக்குமிடம் :—

1. **புதுமைப் பதிப்பகம்,**
3, சாம்பசிவம் தெரு,
தியாகராயநகர், சென்னை.

2. **முருகவேள் புத்தகசாலை,**
12, கணபதி முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை.

C 1808

SADHU PRESS. MADRAS